## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 4/2013

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. ராஜா முகமது, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு நவம்பர் மாதம் 22-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 22.11.2022**

**பெயர் - நந்தினி**

**க/பெ - ரஜேந்திரன்**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12.06 p.m.**

**பிரதிவாதிகள் 3 முதல் 5 மற்றும் 7ம் தரப்பில் குறுக்கு விசாரணை -**

2. எனது பூர்வீகம் எந்த ஊர் என்றால் ஞாயிறு கிராமம் ஆகும். எனது தந்தை பெயர் கௌரங்க நாயுடு ஆகும். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1987ம் வருடம் நடந்தது. நான் தாக்கல் செய்த வழக்கு குறித்து அனைத்து விவரங்களும் தெரியுமா என்றால் தெரியும். எனது தந்தையார் உடன் பிறந்தவர்கள் மொத்தம் 4 நபர்கள் ஆவர். அவர்கள் பெயர்கள் சீனிவாச நாயுடு, புருஷோத்தம நாயுடு, கௌரங்க நாயுடு, ராதா கிருஷ்ணன் ஆகும். வழக்கு சொத்து எப்போது வாங்கினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அது பூர்வீக சொத்து என்பதால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

3. வழக்கு சொத்து குறித்து 2012ல் தெரிந்துக்கொண்டோம். எனது தாத்தா பெயர் என்னவென்றால் கந்தசாமி நாயுடு அவர் தான் மேற்படி வழக்கு சொத்தினை வாங்கினாரா என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து சர்வே எண் 526/2எ வில் 1.03 ஏக்கர் விஸ்தீரணம் மற்றும் சர்வே எண் 526/2பி யில் 50 சென்ட் விஸ்தீரணம் மற்றும் மொத்த விஸ்தீரணம் 1.53 ஏக்கர் என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் ஞாயிறு கிராமத்தில் உள்ளது. பிரதிவாதிகள் 3 முதல் 5 வரையிலானவர்களுக்கும் மற்றும் பிரதிவாதி 7க்கும் வழக்கு சொத்தில் பாகம் உள்ளதா என்றால் உள்ளது.

**விசாரணை முடியும் நேரம்- 12.14ገ,அ,**